

# ரோஜாவும் அதன் முட்களும்

கம்லேஷ் படேல்

அன்பு நண்பர்களே,

ஃபதேகரை சேர்ந்த நம் மதிப்பிற்குரிய ஆதி குரு, லாலாஜி மகராஜ் என அழைக்கப்படும் ஸ்ரீ ராம் சந்த்ர அவர்களின் 147வது ஆண்டு பிறந்த தினம், அவரது பெயரில் நிறுவப்பட்ட மகத்துவம் வாய்ந்த ஆன்மீக அமைப்பாகிய ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் 75வது ஆண்டு நிறைவு தினம் மற்றும் கான்ஹா சாந்தி வனத்தின் தியான அரங்கின் திறப்பு விழா ஆகிய மூன்று முக்கிய தருணங்களின் இந்த சங்கமத்தில் நாம் ஒன்றுதிரண்டுள்ளோம்.

லாலாஜியின் தோற்றத்திற்குப் பின், ஒரு வாழும் மாஸ்டரின் தொடர்ந்த பிரசன்னத்தை இயற்கை நமக்கு உறுதிபடுத்தியுள்ளது. ஒரு ரோஜாவின் அழகை ஒருவர் தொலைவிலிருந்து வியந்து பாராட்ட முடிவது போலவே, மாஸ்டரின் இருப்பை, அவரிடமிருந்து வெகுதொலைவில் இருக்கும் நிலையிலும், தகுதி வாய்ந்ததொரு சீடரால் மனதார மகிழ்ந்து அனுபவிக்க முடிகிறது. ஒரு ரோஜாவின் சுகந்தத்தை நுகர எப்படியும் அதன் அருகில் நீங்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அதை உங்கள் கையில் ஏந்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள் எங்கிருந்தபோதிலும், மாஸ்டரின் பிரசன்னத்தினை உங்களால் உணரமுடியும் என்றாலும்கூட, முக்கியமான ஏதோவொன்றினை நீங்கள் தவறவிடுகிறீர்கள். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், அவரது அருகாமையில் நீங்கள் இருக்க வேண்டியதாக உள்ளது. ஆனால் இந்த மலரைக் கையில் ஏந்தியுள்ள நிலையில், எச்சரிக்கை தேவை! உங்களைக் குத்திக் காயப்படுத்தக்கூடிய முட்களை அது கொண்டுள்ளது. ஏனெனில் மாஸ்டரது சரீர வடிவிலான பிரசன்னம்

எத்தனை வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறதோ, அத்தனை அபாயங்களும் அங்குள்ளன. இதயபூர்வமாக எதிர்கொள்ளப்படும்போது, இந்த அபாயங்கள் இன்னும் மகத்தான ஆசிகளாகவும் மாறுகின்றன என்றாலும், அத்தகைய சூழல்களில் இதயம் உருகிக்கரையத் தவறும் பட்சத்தில், இவை உங்களது ஆன்மீகரீதியிலான சோக முடிவிற்கான காரணகர்த்தா ஆகின்றன.

லாலாஜியின் காலத்தில், மக்கள் மிக உயரிய குறிக்கோள்களை நாடி அவரிடம் வந்ததாகவும், தனது காலத்தில் மன அமைதிக்காக மட்டுமே அவர்கள் வந்ததாகவும் பாபூஜி மகராஜ் ஒருமுறை கூறினார். அது பல ஆண்டுகளுக்கு முன்பிருந்த விஷயம். காலங்கள் தொடர்ந்து மாற்றம் அடைந்து வருகையில், அவர்களது இறங்குமுக போக்கும் தொடர்ந்து வந்திருக்கிறது. இன்று வாழ்க்கையின் இம்மைக்குரிய உலகாயத சூழல்களுக்கும், வழிகாட்டுதலுக்காக மக்கள் மாஸ்டரிடம் செல்வது வழக்கமாகிவிட்டது. எண்ணிலடங்கா உலகாயத பிரச்சினைகளால் சுமையேற்றப்பட்ட நிலையில், “பிரச்சினைகளைத் தீர்ப்பவராக இல்லாத பட்சத்தில் மாஸ்டருக்கான அவசியம் என்ன? அதற்காகத்தானே அவரிடம் செல்கிறோம்!” என்பதாக அவர்களது வாதங்கள் உள்ளன. ஆண்டுதோறும் நிகழும் விழாக்கள், பிறந்த நாட்கள், திருமணங்கள், புதுமனை புகுவிழாக்கள், புதிய வேலை அல்லது தொழிலின் தொடக்கம் போன்ற விசேஷ தினங்களில் ஆசிகளுக்காகவோ அல்லது இவரையோ அவரையோ பற்றிப் புகார் செய்வதற்காகவோ அவர்கள் அடிக்கடி வருகின்றனர். மாஸ்டரிடம் ‘இதையும் அதையும்’ மன்றாடிப் பெறுவதன் விளைவு என்ன? எந்தவித குறிப்பிட்ட ஆசிகளையும் நாடிச்செல்வதன் மூலம், இவ்விதம் ‘நாடிச்செல்வதே’ ஒரு தடையாக ஆகிறது. நீங்கள் நாடிச்செல்வது உலகாயத ஆசிகளோ அல்லது ஆன்மீக முன்னேற்றமோ எதுவாக இருப்பினும், எதிர்பார்க்கும் மனப்பான்மை உங்கள் இதயங்களுக்கு இடையிலான எந்தப் பிரவாகத்தையும் தடுத்து நிறுத்தும் ஒரு அணையாக ஆகிறது. இன்னும் மகத்தான ஆசிகளை அருளக்கூட மாஸ்டர் தயாராக இருக்கிறார் என்றபோதிலும், பிறந்த நாள் ஆசிகள் போன்ற அற்பமான எதிர்பார்ப்புகளுடன் விவேகமற்ற விதத்தில் மக்கள் குறுகிய மனப்பான்மையுடன் தங்களையே அடிக்கடி ஏமாற்றிக்கொள்கின்றனர்!

*உண்மையான ஆசி என்பது என்ன?*
*வாழ்க்கையின் புதிரை விடுவிப்பது எதுவோ அதுவே அது;*
*அதன்மூலம் வாழ்க்கையின் குறிக்கோளே பூர்த்தியடைகிறது.*

உண்மையான ஆசி என்பது என்ன? வாழ்க்கையின் புதிரை விடுவிப்பது எதுவோ அதுவே ஆசி; அதன்மூலம் வாழ்க்கையின் குறிக்கோளே பூர்த்தியடைகிறது. அத்தகையதொரு ஆசியை உங்கள் வாழ்நாளில் ஒருமுறை பெற்றபின், அதற்கும் மேல் ஆசிகள் அவசியம்தானா? ஆகவேதான், உங்கள் வாழ்நாளில் உங்கள் மாஸ்டரை ஒருமுறை நீங்கள் சந்திக்க வேண்டியது அவசியம் என்றும், அதற்கு மேற்பட்ட எந்த சந்திப்பும் கூடுதல் வெகுமதியே என்றும் பூஜ்ய பாபூஜி பிரகடனம் செய்தார். ஆகவே அந்த ஒரே ஒருமுறை நிகழும் சந்திப்பின்போது ஒருவரிடமுள்ள மனப்பான்மையையே அனைத்தும் சார்ந்துள்ளது.

அன்பின் நிமித்தமாக மட்டுமே அன்பு செலுத்தி, எதையுமே நாடாமல், மாஸ்டரிடம் ஒருவர் வருவது அரிதிலும் அரிதான விஷயம். அத்தகைய நேர்த்தியானதொரு அணுகுமுறை, ஸ்ரீ கிருஷ்ணரால் உயர்வாகப் பாராட்டப்பட்ட ஆசைகளற்ற செயல்பாடாகிய *நிஷ்காம கர்மா*விற்கு உண்மையிலேயே முன்னுதாரணமாகத் திகழ்கிறது. அத்தகைய அன்புசெலுத்தும் ஆசைகளற்றதொரு இதயத்தினுள், எதையும் கூறாமலேயே, அழைக்காமலேயே ஓடிவருவதை, மாஸ்டரால் தவிர்க்க இயலாது. மாஸ்டருக்கும் சீடருக்கும் இடையில் ஓர் ஐக்கிய நிலை நிலவுகிறது; அதில் பெறுகின்ற இதயம், உட்செலுத்தும் இதயம் ஆகிய இரண்டும் ஒன்றையொன்று பூரணமாக புரிந்துவைத்துள்ளன. அவற்றின் ஒத்ததிர்வு தன்னியல்பாக நிகழ்கிறது; விளக்கவோ, நியாயப்படுத்தவோ அல்லது உறுதிப்படுத்தவோ எந்த அவசியமும் இன்றி, மாயாஜால ஆற்றலுடன் முழுமையான நிசப்தத்தில் இரண்டும் ஒத்து அதிரத் தொடங்குகின்றன. இருப்பினும் ஆன்மீகத்தை நாடுபவரின் இதயம் திரும்பத் திரும்ப வருடக்கணக்கில் முடிவற்ற ஆசைகளால் நிரப்பப்படும் பட்சத்தில், இந்த நம்பத்தகுந்த ஒத்ததிர்வு ஒத்திப் போடப்படுவது உறுதி. கண் சிமிட்டும் நேரத்தில் நிகழ்ந்திருக்கவேண்டிய ஒன்றிற்கு, இப்போது மதிப்பிட முடியாத ஆயுட்காலங்கள் தேவைப்படலாம்.

புரிந்துகொண்டு, பயிற்சிசெய்து, முழுமையான *பிரத்யாஹாரா* நிலையில் நீடித்திருப்பதன் மூலம் சீடரின் வாழ்வில் மாஸ்டர் ஈர்ப்பு மையம் ஆகிறார். இப்போது மாஸ்டரின் தெய்வீகப் பண்புகளை உணர்ந்த நிலையில், மாஸ்டரது *ஸ்தூல* இருப்பிற்கு அருகாமையில் வருவதற்கான அகத்தூண்டுதலை சீடர் பெறுகிறார். இந்த அகத்தூண்டுதல் உள்ளிருந்து வரவேண்டும். துரதிர்ஷ்டவசமாக, புதிய ஆர்வலர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் விஷயத்தில் உள்ளது போல, பக்குவம் அடைவதற்கு முன்னரே மாஸ்டருக்கு முன்பாக மக்கள் வலுக்கட்டாயமாக நிறுத்தப்படும்போது, பிரச்சினைகள் எழ நேரிடும். இந்த

அமைப்பு மற்றும் இதன் பயிற்சிமுறைகள் குறித்து கொஞ்சம் புரிதலும் அனுபவமும் ஏற்கனவே ஒருவர் பெற்றிருக்காவிடில், மாஸ்டருடன் இருக்கும் அந்தத் தருணத்தில் தான் என்ன பெறுகிறோம் என்பதை அவரால் உணர்ந்து பாராட்ட முடிவதில்லை.

சிறார்களாகவும், சூழ்நிலையைப் புரிந்துகொள்ளாதவர்களாகவும் இருக்கும் நமது குழந்தைகளை அழைத்துவரும்போது, நாம் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களைக் கட்டாயப்படுத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை. இரவில் அவர்களைத் தூக்கம் தழுவுகையில், சௌகரியமான படுக்கை அறைக்கு அவர்களை நீங்கள் அழைத்துச் செல்லாவிடிலோ அல்லது பழக்கமே இல்லாமல் அவர்களைத் தரையில் அமர்த்தினாலோ அல்லது ஆசிரமத்தில் வழங்கப்படும் அனைத்தையும் பிரசாதமாக பாவித்து சாப்பிடும்படி அவர்களை நீங்கள் வற்புறுத்தினாலோ, அவர்கள் முரண்டுபிடித்து அந்த சூழ்நிலைகளை வெறுக்கத் தொடங்கலாம். மாஸ்டருடன் இருக்கும்போது அதுபோன்ற பல்வேறு அசௌகரியமான சூழல்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன. அடக்கப்பட்ட அவர்களது உணர்ச்சிகள் ஆழ்மனதில் சேமிக்கப்பட்டு, அவை வாழ்வின் பிற்பகுதியில் மாஸ்டருக்கும் குழந்தைகளுக்கும் இடையே ஒரு தடுப்புவேலியை உருவாக்கலாம்.

*அன்பின் நிமித்தமாக மட்டுமே அன்பு செலுத்தி, எதையுமே நாடாமல், மாஸ்டரிடம் ஒருவர் வருவது அரிதிலும் அரிதான விஷயம். அத்தகைய நேர்த்தியானதொரு அணுகுமுறை, ஸ்ரீ கிருஷ்ணரால் உயர்வாகப் பாராட்டப்பட்ட ஆசைகளற்ற செயல்பாடாகிய நிஷ்காம கர்மாவிற்கு உண்மையிலேயே முன்னுதாரணமாகத் திகழ்கிறது. அத்தகைய அன்புசெலுத்தும் ஆசைகளற்றதொரு இதயத்தினுள், எதையும் கூறாமலேயே, அழைக்காமலேயே ஓடிவருவதை மாஸ்டரால் தவிர்க்க இயலாது. மாஸ்டருக்கும் சீடருக்கும் இடையில் ஒரு ஐக்கிய நிலை நிலவுகிறது; அதில், பெறுகின்ற இதயம், உட்செலுத்தும் இதயம் ஆகிய இரண்டும் ஒன்றையொன்று பூரணமாக புரிந்துவைத்துள்ளன. அவற்றின் ஒத்ததிர்வு தன்னியல்பாக நிகழ்கிறது; விளக்கவோ, நியாயப்படுத்தவோ அல்லது உறுதிப்படுத்தவோ எந்த அவசியமும் இன்றி, மாயாஜால ஆற்றலுடன் முழுமையான நிசப்தத்தில் இரண்டும் ஒத்து அதிரத் தொடங்குகின்றன.*

இதயபூர்வமாக மாஸ்டரை அணுகுவது இன்னும் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! ஒரு உண்மையான சீடர் மாஸ்டரை சந்திப்பதற்காக வீட்டைவிட்டுப் புறப்படும் முன், அவருள் அன்பு, மரியாதை மற்றும் இனிமையான ஆச்சரியம் கலந்த எதிர்பார்ப்பு நிரம்பிய மனப்பான்மை நிலவுகிறது. மாஸ்டருக்கு அருகாமையில் வந்து, அவரது தனி அறைக்குள் பிரவேசிக்கும்போது, அவர்கள் சாந்தமாக நுழைகின்றனர். அவர்களது கண்கள் மென்மையாக தரையை நோக்கிய வண்ணம் உள்ளன- அந்த இடம் பிரார்த்தனை நிறைந்த இதயத்துடன் போற்றப்பட வேண்டும். மென்மையாகவும் சாந்தமாகவும் நடப்பதன் மூலம், தங்கள் சரீரத்தின் சுமை முழுவதும் நிலைகொள்ள அவர்கள் அனுமதிப்பதில்லை. அத்தகைய உண்மையான சீடர்கள் ஒரு முன் இருக்கையையோ அல்லது அதிகம் சௌகரியமானதொரு இருப்பிடத்தையோ தேடுவதில்லை. மாஸ்டரது முன்னிலையில் அனைத்து கருத்துகளையும், விருப்பங்களையும் அபிப்பிராயங்களையும் அவர்கள் இயல்பாக விட்டுவிடுகின்றனர். மாஸ்டரது மன மகிழ்விற்கு ஏற்ப தாங்கள் தயார்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் உண்மையிலேயே விரும்பும் பட்சத்தில், தற்காலிகமாகவாவது அவர்கள் அவ்வாறு இருக்கவேண்டும்.

ஒருவர் தொடர்ந்து ஆராய்ந்து பார்த்து, அனைத்தையும் பற்றிய முடிவுகளை உருவாக்குவதன் மூலம், மாஸ்டரது பணியை திசைதிருப்புகிறார். மாஸ்டரது முன்னிலையில், தனிமனித சுபாவம் முடிவிற்கு வரவேண்டும்; அது நீடித்திருந்தாலும்கூட, உண்மையான சீடர் என்பவர் குறைந்த பட்சம் மரியாதை நிறைந்த அமைதியை பராமரிக்கவேண்டும். மாஸ்டரின் ஒவ்வொரு அசைவையும் ஆராய்ந்துபார்ப்பது, ஒரு சீடருக்கு அழகல்ல. உண்மையான கலந்துரையாடல் நிகழ - உண்மையான ஐக்கியம் ஆரம்பமாவதற்கு - முழுமையான உள்முக அமைதி தேவைப்படுகிறது. மாஸ்டரின் பௌதீக பிரசன்னத்தின் மீது முழு கவனமும் இருக்கின்ற அதே நேரம், தேடி அலைபாயும் கண்கள், வினா எழுப்பும் மனங்கள் மற்றும் தீவிரமாக ஏங்கும் இதயங்கள் கட்டாயம் ஓய்வெடுத்தாக வேண்டும். உங்களது உள்முக ஆன்மீக நிலை அவரது ஆன்மீக நிலையுடன் ஒத்ததிர்வதை உணர முயற்சி செய்யுங்கள்.

மாஸ்டருக்கு மிக நெருக்கமான அருகாமையில் நீங்கள் இருந்துவிட்டால், பெரும்பாலும் வேறொரு விதமான இடர்பாடு ஆரம்பமாகிறது. இந்த இடர்பாடு மேலும் ஒரு ஆசியாகவோ அல்லது அபாயகரமானதாகவோ நிரூபணமாகலாம். எப்போதும்போல அது சீடரைப் பொறுத்த விஷயமாகும். மாஸ்டரின் தனிமனித இயல்பிற்கு மாறான சுபாவங்கள் அல்லது விநோதமான பண்புகள் இப்போது சீடருக்கு கண்கூடாகத் தெரிகின்றன; முன்னர் தெய்வீகமாக உணரப்பட்ட மாஸ்டருடன், புறப்பார்வைக்கு

குறையுள்ளதாகத் தோற்றமளிக்கும் இந்த நடத்தைப் பண்புகளைப் பற்றி ஆராய்ந்து, அவர் சீர்தூக்கிப் பார்க்கத் தொடங்குகிறார். ஒருமுறை, “என்னைக் காண பலர் வருகின்றனர். ஆனால் உண்மையில் எவரும் என்னைக் காண்பதில்லை!” என்று பிரியமான பாபூஜி குறிப்பிட்டார். வழக்கமாக நாம் பெற்றிருக்கும் உணர்வுநிலை மற்றும் புரிதலின் மட்டத்திலிருந்து நம்மால் உள்வாங்கிக்கொள்ள முடிவதை மட்டுமே நாம் பார்க்கிறோம். ஒருவரது உணர்வுநிலையின் மட்டத்தினால் ஆட்டுவிக்கப்படும் கீழ்நிலைக் கண்ணோட்டத்திலிருந்து, மிக உயரிய பரிமாணங்களைக் காண்பது சவாலான விஷயமாகும். நாம் காண்பது நமது சொந்த உணர்வுநிலையின் ஒரு பிரதிபலிப்பேயன்றி வேறல்ல; ஆக மாஸ்டர் ஒரு கண்ணாடிபோல ஆகிறார். அவரிடம் நாம் காண்பது, நமது சொந்த மனப்பான்மைகளை, எதிர்பார்ப்புகளை அல்லது சுருக்கமாகக் கூறினால், நமது சம்ஸ்காரங்களை சார்ந்ததாகவே உள்ளது. இவற்றில் சம்ஸ்காரங்களின் பங்கு இருப்பதால், ஆட்சேபத்திற்கு இடமின்றி அவை சந்தேகத்தையும், ஓரளவிற்கு உடன்பாடற்றதொரு நிலையையும், விரக்தியையும் தோற்றுவிக்கின்றன; இவ்வாறு தோற்றுவிக்கப்படுபவை, தங்கள் பங்கிற்கு மென்மேலும் எதிர்ப்பினை உருவாக்குகின்றன. ஒருவர் தனக்கும் மாஸ்டருக்கும் இடையில் ஒரு சுவரை எழுப்பத் தொடங்குகிறார். இது நிறுத்தப்பட்டால் மட்டுமே, மாஸ்டரை மாஸ்டராக கருதுவது சாத்தியமாகும். இது நிறுத்தப்பட முடியுமா? இது சீடரைப் பொறுத்த விஷயமாகும்.

*உண்மையான கலந்துரையாடல் நிகழ - உண்மையான ஐக்கியம் ஆரம்பமாவதற்கு - முழுமையான உள்முக அமைதி தேவைப்படுகிறது. மாஸ்டரின் பௌதீக பிரசன்னத்தின் மீது முழு கவனமும் இருக்கின்ற அதே நேரம், தேடி அலைபாயும் கண்கள், வினா எழுப்பும் மனங்கள், மற்றும் தீவிரமாக ஏங்கும் இதயங்கள் கட்டாயம் ஓய்வெடுத்தாக வேண்டும். உங்களது உள்முக ஆன்மீக நிலை அவரது ஆன்மீக நிலையுடன் ஒத்ததிர்வதை உணர முயற்சி செய்யுங்கள்.*

இந்த கட்டத்தை நீங்கள் வந்தடைந்திருக்கிறீர்கள் என்றால், தயவுசெய்து அதற்காக நம்பிக்கை இழந்துவிடவேண்டாம்; ஏனெனில் இப்போது மாஸ்டரிடம் நீங்கள் உணர்ந்து அறிந்துள்ள தனிமனித இயல்பிற்கு மாறான சுபாவங்களை சரியான விதத்தில் நீங்கள் புரிந்துகொண்டுள்ள பட்சத்தில், மேற்கொண்டு பரிணாம வளர்ச்சிக்கான தொடக்கப்புள்ளியாக அது ஆகலாம். இந்தக் குழப்பமான சூழல்களைப்

பயன்படுத்திக் கொண்டு, தர்க்கரீதியாக, மாஸ்டரிடம் முன்பு அபாயகரமானதாகத் தோற்றமளித்த ஒவ்வொரு நுணுக்கமான விஷயத்தையும் தெய்வீகரீதியில் ஏக்கம் கொண்டுள்ள, இயல்பாகப் புரிந்துகொள்கின்ற இதயத்தினால், அவற்றிற்கு எவ்வாறு எளிதில் தீர்வு காணப்பட முடியும் என்று முயற்சிசெய்து பாருங்கள். மாஸ்டரிடம், புறப்பார்வைக்கு முரண்பாடாகத் தோற்றமளித்த அம்சங்களை தங்களது இதயங்களில் நேர்மையாக ஒருங்கிணைக்கத் தவறுவதன் மூலம், சீடர்கள் தங்களது முன்னோக்கிய பயணத்திற்குத் தாங்களே தடையாக ஆகிறார்கள். ஏதோவொரு கட்டத்தில், ஒவ்வொரு சீடரும் தங்கள் இதயத்திலேயே தங்களது மாஸ்டரை சித்திரவதைக்கு ஆளாக்குகிறார்கள். இந்த கட்டத்தைப் புரிந்துகொண்டு, இதை வென்று கடந்து வருவதன் மூலம், அவர்கள் ஒரு மாபெரும் முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறார்கள்.

யாத்ரீகரான ஒரு சீடர், தனது பயணப்பாதையில், மாஸ்டரிடம் தான் தவறாகப் புரிந்துகொண்ட பிழையை அறிந்து, முழுமையாக நம்பிக்கை இழந்து, இதயம் திறந்து கதறி அழும் நிலையை கற்பனை செய்து பாருங்கள்; இவர்கள்தான், புதிதாகக் கண்டறியப்பட்ட ஆன்மீக மாஸ்டரைப் பற்றி முன்பு, "ஆஹா, ஓஹோ" என்றெல்லாம் புகழ்ந்தவர்கள்! இந்த அதிமுக்கியமான சந்தர்ப்பத்தில், சிலர் அமைப்பைவிட்டு வெளியேறி, வழிகாட்டியிடமிருந்து தூர விலகிச் செல்கின்றனர். மாஸ்டர் குறித்த இந்த திடீர் விரக்தியுடன் தொடர்ந்து ஆழ்ந்து சிந்திப்பதன் மூலம் விளைகின்ற எதிர்மறை அதிர்வுகள் அவரை பாதிக்கப்போவது நிச்சயம். அதற்கும் மேலாக, எதிர்மறைத்தன்மை கொண்ட இந்த நீர்ச்சுழல் வளையத்திற்குள் சீடரும் மாஸ்டரும் ஒன்றாக ஈர்க்கப்படுவது மட்டுமல்லாமல், அதுபோலவே மற்ற பல சகாக்களும் பாதிக்கப்படுகின்றனர். அன்பின் அதிர்வலைகள் ஒரு சிற்றலை விளைவைக் கொண்டிருப்பது போலவே, வெறுப்பின் அதிர்வலைகளும் கொண்டுள்ளன. நிலைமை இவ்விதமாக உருவெடுத்தபோதிலும், கருணையும் இரக்கமும் படைத்த மாஸ்டர், ஒட்டுமொத்தமாக அனைவரையும்

*இந்தக் குழப்பமான சூழல்களைப் பயன்படுத்திக்கொண்டு, தர்க்கரீதியாக, மாஸ்டரிடம் முன்பு அபாயகரமானதாகத் தோற்றமளித்த ஒவ்வொரு நுணுக்கமான விஷயத்தையும் தெய்வீகரீதியில் ஏக்கம் கொண்டுள்ள, இயல்பாகப் புரிந்துகொள்கின்ற இதயத்தினால், அவற்றிற்கு எவ்வாறு எளிதில் தீர்வு காணப்பட முடியும் என்று முயற்சிசெய்து பாருங்கள்.*

வரவேற்கிறார். அவர் தன்னை அனைவரிடமும் ஒப்படைத்துவிட்டு, எப்போதும் பாதிப்பிற்கு ஆளாகக்கூடியவராக நீடிக்கிறார். அவரது தனிப்பட்ட அமைதிக்கான அக்கறை, ஏற்கனவே - வெகுகாலம் முன்பே - மரித்துவிட்டது. சீடர்களின் இதயங்களில் தனிப்பட்ட விதத்தில் தான் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதுபற்றி அவர் கவலைப்படுவதில்லை. எதுவந்தபோதிலும், அன்பு செலுத்துவதில் எந்த நிபந்தனைகளையும் ஒருவர் திணிப்பதில்லை!

மாஸ்டரின் இரக்க சுபாவம், அவர் நேசிக்கின்ற சீடர்களின் இதயங்களில் தோன்றுகின்ற எதிர்மறை அதிர்வலைகளின் விளைவுகளிலிருந்து, அவரை பாதுகாப்பதில்லை. மாஸ்டராகவே இருந்தாலும், மனத்தளர்ச்சி அவரது மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. உண்மையில் அத்தகைய மனத்தளர்ச்சி, மாஸ்டரது வாழ்க்கையில், அவரது உயரிய கூருணர்வுத்திறனின் காரணமாக இன்னும் பேரளவிலான சேதத்தைக்கூட ஏற்படுத்துகிறது. 1970-களின் பிற்பகுதியில் ஒருமுறை, சகோதரி கஸ்தூரி மற்றும் சில மூத்த அங்கத்தினர்களுடன் பாபூஜி இருந்தபோது, அவ்விதமே நிகழ்ந்தது. திடீரென சூழ்நிலையில் ஒரு மாற்றத்தை - பாபூஜியின் ஆன்மீக நிலையில் ஒரு உள்வாங்குதலை - கஸ்தூரி உணர்ந்தார். பாபூஜியின் உணர்வுநிலையானது அதன் விரிவடைந்த நிலையிலிருந்து சுருங்கிப்போனதை கஸ்தூரி கவனித்தார்; திடீரென பாபூஜி உற்சாகமிழந்து போனார். அதற்கான காரணத்தைப் பகிர்ந்துகொள்ளும்படி பாபூஜியிடம் சகோதரி கஸ்தூரி வேண்டிக் கேட்டபோது, ஒரு குறிப்பிட்ட மையத்தின் அங்கத்தினர்கள், எதிர்மறையான மற்றும் அரசியல் சார்ந்த சூழல் உருவாகும் விதத்தில் பிரிவினைகளை உருவாக்கி வருவதாக தயக்கத்துடன் அவர் குறிப்பிட்டார்.

சீடர்களின் இதயங்களில், அன்பு மற்றும் வெறுப்பு சூழ்ந்திருக்கும் இவ்விரு நிலைகளையும் மாஸ்டர் காண்கிறார். ஒருவர் அன்பில் ஆழ்ந்திருக்கையில், ஒருவித எதிர்க்கும் சுபாவம் அங்குள்ளது: உதாரணமாக, அன்பிற்குரியவரை சந்திப்பதற்கு தடையாக இருக்கும் எந்தவொன்றையும் எதிர்க்கும் சுபாவமாக உள்ளது. எந்தக் காரணத்திற்காகவாவது கோப உணர்வுகொண்டவராக ஒருவர் மாஸ்டரிடமிருந்து விலகிச்செல்ல விரும்பும்போது, அதுவும் ஒரு எதிர்க்கும் சுபாவம்தான் என்ற போதிலும், அது ஒரு மாறுபட்ட திசையிலானது. நேர்மறை மற்றும் எதிர்மறை ஆகிய இரண்டு உணர்ச்சிபூர்வ கட்டங்களிலும், சீடர்களின் எதிர்க்கும் சுபாவத்திற்கு மாஸ்டர் அமைதியானதொரு பார்வையாளராக இருக்கிறார். தேர்வு செய்வதற்கென அவரிடம் இருப்பது என்ன? பிரார்த்தனை செய்தபடி அவர் காத்திருக்கிறார்! சீடரும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். சுருங்கச் சொல்வதெனில், தன்னலமற்ற தன்மையும் தூய்மையான அன்பும் நிறைந்த இந்த

மகா சமுத்திரத்தினுள் ஒன்றுகலக்கும் எண்ணிலடங்கா உபநதிகளுடனான மாஸ்டரின் சங்கமம் அங்கு நிகழ்கிறது.

சீடர்களின் பல உணர்ச்சிபூர்வ எதிர்க்கும் சுபாவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாலும், சீடரின் அகங்காரம் பெருமளவு பண்படுத்தப்படுவதை மாஸ்டர் உறுதிசெய்கிறார். இதனை சாதிக்கும் பொருட்டு, அவர் தனித்துவமான சூழல்களை உருவாக்கிக்கொண்டே இருக்கிறார். சிற்றின்ப ஆசையின் பிடியிலிருந்து தப்பிப்பது, இந்த அகங்காரத்திலிருந்து தப்பிப்பதைவிட ஒருவேளை இன்னும் அதிகம் எளிதாக இருக்கலாம். முதல் விஷயத்தில், ஒருவரிடம் எதிர்மறைத் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு இருக்கிறது. ஆனால் அகங்காரம் தலைதூக்கும் விஷயத்தில், அவ்வாறு இருப்பதில்லை. ஆசை, ஐந்து தடுப்புகள் அல்லது வட்டங்களை மட்டுமே கொண்டுள்ளது, அதேநேரம் மொத்தமுள்ள இருபத்து மூன்று வட்டங்களில் பதினோரு வட்டங்களை அகங்காரம் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்! சீடரின் அகங்காரத்தைப் பண்படுத்தும்போது, மாஸ்டர் அதீத எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியது அவசியம். சில நேரங்களில், அனைத்து முன்னெச்சரிக்கைகள் இருந்தபோதிலும், சீடர் காரணமின்றி எரிச்சலடைகிறார். அப்போதும் சீடர் புண்பட்டிருப்பதை பார்த்தும், மாஸ்டர் பாதையைத் தொடர்வது அவசியமாகிறது. மகான் கபீரின் வார்த்தைகளில் சொல்வதெனில், உள்ளிருந்து பானையின் வடிவத்திற்கு ஆதரவாக செயல்படும் அதேநேரம் வெளியிலிருந்து களிமண்ணைத் தட்டிக்கொண்டிருக்கும் குயவனைப்போல, தனிமனிதப் பண்பினை

*மகான் கபீரின் வார்த்தைகளில் சொல்வதெனில், உள்ளிருந்து பானையின் வடிவத்திற்கு ஆதரவாக செயல்படும் அதேநேரம் வெளியிலிருந்து களிமண்ணைத் தட்டிக்கொண்டிருக்கும் குயவனைப்போல, தனிமனிதப் பண்பினை உருவாக்குவதில் மாஸ்டர் செயல்படுகிறார். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் சீடர் அனுபவிக்கும் வேதனையை, மனிதராக அவதரித்துள்ள மாஸ்டரும் உணர்கிறார்.*

உருவாக்குவதில் மாஸ்டர் செயல்படுகிறார். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் சீடர் அனுபவிக்கும் வேதனையை, மனிதராக அவதரித்துள்ள மாஸ்டரும் உணர்கிறார்.

பக்தி அதிகரிக்கையில், தான் உடன் இருப்பதை எளிதாக்கி, இன்னும் நெருக்கமாக சீடரை மாஸ்டர் ஈர்த்துக்கொள்கிறார். இவ்வாறாக பக்தனின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது. உள்முக தன்மைமாற்றம் படிப்படியாக துரிதப்படுத்தப்படுகிறது;

ஆன்மீகப் பரவசத்தில் மூழ்கடிக்கப்பட்டவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்; இது, அளவுகடந்த நன்றியுணர்விற்கு வழிவகுக்கிறது. இருந்தபோதிலும், இன்னமும் அபாயம் தொடர்ந்து நீடிக்கிறது. இந்த தன்மைமாற்றத்திற்குரிய சூழல்களில், சீடர், தன்னை, பிறரைவிட உயர்ந்தவராக அல்லது பிறரைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவராக நினைக்கத் தொடங்கலாம். அத்தகையதொரு சூழ்நிலையைப் பார்க்கும் மாஸ்டரின் இதயம் சுக்கு நூறாக உடைகிறது.

மாஸ்டருடனான பயணம் முழுவதிலும், விரைவான முன்னேற்றம் அல்லது தானே உருவாக்கிக்கொள்ளும் கருந்துளைக்குள் விழுந்து நொறுங்குவது என்ற இவ்விரண்டிற்குமிடையே தேர்வு செய்யும் வாய்ப்பு ஒருவருக்கு எப்போதும் இருக்கிறது; ஒருவரது இந்த சுய படைப்பை, ஆன்மீக பயணப்பாதை வளைவு என்றழைக்க விரும்புகிறேன். அகங்காரத்தின் நீர்ச்சுழலில் நீங்கள் சிக்கிக்கொண்டுவிட்டால், அதிலிருந்து விடுபட்டு வெளிவருவது சிரமம். இது நிகழ்ந்து, இந்த துரதிர்ஷ்டவசமான வளைவினை உணர்ந்தவராக நீங்கள் ஆகும் பட்சத்தில், ஒரு அடி பின்னோக்கி எடுத்துவைத்து, உங்களைப் பற்றியும், மாஸ்டர் மற்றும் அவரது ஆற்றல்கள் பற்றியும் மறுமதிப்பீடு செய்யும் அதே நேரம், மிகத்தெளிவானதொரு இதயத்துடன், உங்கள் முயற்சிகளை மறுசீரமைத்துக்கொள்ளுங்கள். உள்முகமாக மாஸ்டரை மதிப்பீடு செய்வதில் குற்றம் ஏதுமில்லை. அத்தகையதொரு தருணத்தில், அவ்வாறு செய்யாமல், உங்கள் பயணத்தில் உங்களால் முன்னோக்கிச் செல்லமுடியாது. தன்னையே முழுமையாக சமர்ப்பித்துக்கொள்ளும் அளவிற்கு பாதை முழுவதும் பயணிக்க ஒருவர் தயாராக இருக்கும் பட்சத்தில், “இவர் நான் வழிபடத் தகுந்தவர்தானா?” என்று மாஸ்டர் பற்றிய இந்தப் பரிசோதனை அவசியமானதாகவே இருக்கிறது. இதை நீங்கள் செய்யும்போது, மாஸ்டரை நீங்கள் அவமதிப்பதாக ஆகாது. இதயம் முழுமையாக திருப்தி அடைந்தால் மட்டுமே, தனது தனித்தன்மையைப் பாதுகாக்கும் தடுப்புவேலிகள் அனைத்தையும் ஒருவர் அகற்றுகிறார். அன்பில், தடைகள் அனைத்தும்

*மாஸ்டருடனான பயணம் முழுவதிலும், விரைவான முன்னேற்றம் அல்லது தானே உருவாக்கிக்கொள்ளும் கருந்துளைக்குள் விழுந்து நொறுங்குவது என்ற இவ்விரண்டிற்குமிடையே தேர்வு செய்யும் வாய்ப்பு ஒருவருக்கு எப்பொழுதும் இருக்கிறது; ஒருவரது இந்த சுய படைப்பை, ஆன்மீக பயணப்பாதை வளைவு என்றழைக்க விரும்புகிறேன்.*

அகல்கின்றன. எதிரிகள் அல்லது நாம் விரும்பாத நபர்கள் ஆகியோரது விஷயத்தில் மட்டுமே, தற்காப்பு செயல்முறைகள் நீடிக்கின்றன. தடைகள் கரைந்து, துணிவு இவ்விதம் தூண்டிவிடப்படும் நிலையில், நீர்த்துளியானது மகாசமுத்திரத்தினுள் மூழ்கத் தயாராக உள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, மாஸ்டர் சம்பந்தமான தங்களது குழப்பத்திலிருந்து விடுபட்டு மீண்டுவருவதற்கு, பெரும்பாலானவர்களுக்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது; இந்த காலகட்டத்தில், உணர்ச்சிபூர்வ ஆற்றலின் பெரும்பகுதி செலவழிந்துவிடுகிறது. இந்த இருண்ட காலகட்டம் முழுவதிலும் ஒருவர் நிலைபெறாமலும் நோக்கமின்றியும் நீடிக்கிறார். யூகிக்க முடிகின்ற இந்த காலகட்டத்தில், மாஸ்டரும் நிலைகொள்ளாமல் தவிக்கிறார். அவர் சீடருடன் ஒத்ததிர்ந்து, சீடருடைய நலன் மற்றும் ஸ்திரத்தன்மை குறித்த கவலைகளால் தளர்வடைகிறார். சீடரின் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்யும் பொருட்டு, மாஸ்டர் இப்போது தனது பணியினைத் தீவிரப்படுத்தவேண்டியது அவசியம். இந்த நுட்பமான தருணத்தில், பயணப்பாதையில் எவ்வித வளைவும் உருவாக அவர் இடமளிப்பதில்லை.

ஒவ்வொரு கட்டத்திலும், சுயமுக்கியத்துவமே பிரதான குற்றவாளியாக நீடிக்கிறது; ஆன்மீகரீதியாக செயலற்று இருக்கும் ஒரு தேக்க நிலையில் அது நம்மை இருத்துகிறது. அகங்காரம் தொடர்ந்து தலைதூக்குகிறது! மாஸ்டரால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளும், திருத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் நமது இதயங்களை ஆழமாகப் புண்படுத்தலாம். துரதிர்ஷ்டவசமாக, அகங்காரம் எண்ணிலடங்கா தலைகளைப் பெற்றுள்ளது; ஒன்று அழிக்கப்படும்போது, மற்றொன்று தலைதூக்கத் தயாராக இருக்கிறது! இந்த விளையாட்டின் பயனற்ற தன்மையை ஒருநாள் நாம் உணர்ந்து, அன்புடன் உறுதியாக சரணடையும்வரை, முடிவில்லாத விதத்தில் இது தொடர்கிறது. இப்போது ஆதிவீட்டினை நாம் அடைந்துவிட்டோம். இதற்கு எவ்வளவு காலம் நாம் காத்திருக்கவேண்டும்? நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும் நேரத்திற்கு ஓர் எல்லை இருக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்வோமாக. எல்லையற்ற நேரம் நம் கைவசம் இல்லை! இதயம் எல்லா விதத்திலும் நம்பிக்கைகொண்டுவிட்டால், முழுமையாக நம்மை சமர்ப்பித்துக்கொள்ள உகந்த நேரம் அதுவே.

அன்புடனும் மரியாதையுடனும்,

*கம்லேஷ் படேல்*

CELEBRATING 75 YEARS

SHRI RAM CHANDRA MISSION

முக்கியத்துவம் வாய்ந்த மூன்று தருணங்களின் கொண்டாட்டம்:

நம் மதிப்பிற்குரிய ஆதி குரு, லாலாஜி மகராஜ் என அழைக்கப்படும்
ஃபதேகரை சேர்ந்த ஸ்ரீ ராம் சந்த்ர அவர்களின் 147வது ஆண்டு பிறந்த தினம்,
அவரது பெயரில் ஸ்தாபிக்கப்பட்ட மகத்துவம் வாய்ந்த ஆன்மீக அமைப்பாகிய
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் 75வது ஆண்டு நிறைவு தினம் மற்றும்
கான்ஹா சாந்தி வனத்தின் தியான அரங்கின் திறப்பு விழா



*Kanha Shanti Vanam, Hyderabad.*

heartfulness

purity weaves destiny